**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொண்டேன்.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் பாதீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகள் தனித்தனியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற் குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அவ்வாறு பாதீடு செய்யப்பட்ட தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது அனைத்து வருமானம் மற்றும் செலவினம், மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளுடன் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் வழிகாட்டலின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகள் தனித்தனியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 1,337,550 ஆன 65 இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வந்த போதும் அச்சொத்துக்களின் செயற்திறனான பயன்பாட்டுக் காலம் தொடர்பாக மதிப்பீட்டு | அதிகளவில் உருப்படிகள் காணப்படுவதால் மீள் மதிப்பீட்டினை நடைமுறையில் மேற்கொள்வதற்கு முடியாமையால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நியமத்தின் வழிகாட்டலின் பிரகாரம் சொத்துக்களின் செயற்திறனான பயன்பாட்டுக் காலம் தொடர்பான மதிப்பீடு தவறை |

| | | | |
|---|---|---|---|
| | வழுவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. வேண்டும். | | மீண்டும் திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான துன்கண்ணாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூபா 1,008,348 செலவில் 2019 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டிருந்த பெட்டி அடுக்கு இயந்திரம் மற்றும் கணனி மற்றும் தளபாட உபகரணங்கள் மூலதனமாக்கப்படாமல் அந்தந்த ஆண்டின் மீண்டெழும் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் சரியாக மூலதனமாக்கப்பட்டு குறித்த சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் அண்மித்த எதிர்கால நலன்கள் அல்லது சேவை சாத்தியப்பாடுகள் நிறுவனங்களுக்கு உட்பாய்ச்சலுடன் கூடிய சொத்துக்கள் நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | 35 ஆண்டு காலமாக பீ.சீ.சீ. லங்கா தனியார் கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா 26,715,037 ஆன கடன் மிதிக்காக வருடாந்தம் ரூபா 4,011,609 வீதம் வட்டி வருமானமொன்று கணக்கிடப்பட்டு அதனை பெற்றுக்கொள்ளும் இயலுமை இல்லாமையால் அப்பெறுமதி அறவிட முடியாக் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்து வதற்கும் கடன் மீதிக்காக நட்டஈட்டுப் பெறுமதிக்காக தேவையான சீராக்கங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வட்டி ஒவ்வொரு ஆண்டிலும் வட்டி வருமான காண்பித்து வருடக் கணக்காக அறவிடப்படா மையால் அவ்வாறு அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக்கடன் மற்றும் வட்டி என்பவற்றை மொத்தமாக கொடுப்பனவு செய்யுமாறு பீ.சீ.சீ. லங்கா கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் இது தொடர்பாக வேறு நடவடிக்கை ஒன்றை எடுக்க முடியாதுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 33 ஆம் பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கலுடன் அண்மித்த பொருளாதார நலன்கள் அல்லது சேவை சாத்தியப்பாடுகள் நிறுவனங்களுக்கு உட்பாய்ச்சலாக வரும் போதும் மீண்டெழும் அளவு விசுவாசமாக அளவிட முடியுமாக இருக்கையில் அவை வட்டி வருமானமாக இனங்காணப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற் |

கும் நட்டப் பெறுமானத்திற்காக தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்து முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 3,363,900 கிரயமான 39 இயந்திராதிகள் பரீட்சார்த்த செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்ததாக கணக்காய்விற்குக் குறிப்பிடப்பட்ட போதும் குறித்த செயற் திட்டங்களின் விபரங்கள் இல்லாமையால் அச்சொத்துக்களின் பௌதீக நிலைத்திருத்தல் தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. அவ்வாறே அச்சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு பொருத்தமன வகையில் கைதவிர்ப்பதற்கு அல்லது மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்கள் அனைத்தும் கைத்தொழிலாளர்களுக்கு அக்காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையால் அது தொடர்பாக பதிவேடுகளை பேணுதல் இடம்பெறாமையால் அந்த இயந்திர உபகரணங்கள் மெய்மையாய்விற்கு உட்படுத்த முடியாதிருந்தது. | அச்சொத்துக்களை மெய்மையாய்வு செய்து பதிவேடுகளுக்கு உட்படுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அப்பௌதீக இருப்பு பெறுமதிக்காக இருப்பு பதிவேட்டின் பிரகாரம் இருந்த மீதியான ரூபா 26,351,915 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. புத்தகங்களின் பிரகாரம் மீதி பௌதீக மெய்மையாய்வு அறிக்கையுடன் தெரிவு பரிசோதனையின் போது ஆய்வுகூட உபகரண இருப்புக்களில் ரூபா 852,754 பெறுமதியான 101 இருப்பு | களஞ்சிய இருப்பு பெறுவனவு மற்றும் வழங்கல் சரியான இருப்பு குறியீட்டு இலக்கங்கள் பயன்படுத்தும் போது தாமதமொன்று இடம் பெற்றுள்ளதால் இடம்பெற்றுள்ள இவ்வேறுபாடு தற்போது சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | பௌதீக இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் கணக்குகளை சீராக்குவதற்கும் விலகல் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருப்படிகளில் பற்றாக்குறை யொன்றும் ரூபா 375,412 பெறுமதியான 49 அலகுகள் மிகையாகவும் காணப்பட்டமை, இருப்பு பதிவேடுகளுக்கு உள்ளடக்கபடாதிருந்த பெறுமதி கணக்கிடப்படாத 1834 இருப்பு அலகுகள் காணப்பட்டமை காரணமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இருப்புக்களின் சரியான பெறுமதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | |
| (இ) | ‘‘திசிந்தி’’ தெங்கு ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கும் சேவைகளுக்காக முறைப்படி பட்டியல் வழங்கப்படாமை, கடன்பட்டோர் பேரேடு பேணப்படாமை, பணம் அறவீடு மற்றும் வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட பணத்தை இனங்காண்பதில் முறையான நடைமுறையொன்று இல்லாமை போன்ற விடயங்கள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,199,681 ஆன கடன்பட்டோர் மற்றும் அதற்குரிய மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 8,996,305 ஆன வருமானத்தின் சரியானதன்மையை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்குரிய ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பணம் உரிய வகையில் திசிந்த மற்றும் நீர் மாதிரிக் கட்டண வருமானத்திற்கும் கடன்கொடுத்தோருக்கும் கூடுதலாக கணக்கீடு செய்தமை அடிப்படையில் ரூபா 1,699,932 தொகையொன்று உரிய கட்பட்டோரிடமிருந்து கழிக்கப்பட்டுள்ளது. | ‘‘திசிந்தி’’ தெங்கு ஆலை உரிமை யாளர்களுக்கு சேவை வழங்குவது தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படும் தவறுகளை தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ)பிரிடிஷ் சிலோன் லங்கா கம்பனிக்கு (BCC) தேங்காய் எண்ணைய் விலை சுயாதீன நிதியத்திலிருந்தும் மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன் | 58,265,037 | மீதி உறுதிப்படுத்தல் | குறித்த மீதி உறுதிப்படுத்தல் அறிக்கையை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய தொகைக்காக மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும |
| (ஆ)05 கடன் கொடுத் தோருக்கு செலுத்த வேண்டிய மீதி | 22,537,373 | மீதி உறுதிப்படுத்தல் | அனைத்து கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல் | செலுத்த வேண்டிய தொகைக்காக மீதி |

| | | |
|---|---|---|
| | கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரிடிஷ் சிலோன் லங்கா கம்பனிக்கு (BCC) 1985 ஆம் ஆண்டின் போது தேங்காய் எண்ணைய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து வழங்கியிருந்த வட்டியுடனான கடன் ரூபா 26,715,037 தொகை மற்றும் 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட வட்டியற்ற கடன் ரூபா 31,550,000 என மொத்தம் ரூபா 58,265,037 ஆன கடன் தொகை ரூபா 52,150,917 ஆன வட்டியுடன் அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | BCC கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு வருடக் கணக்காக வெவ்வேறு அமைச்சுகளின் கீழ் கலந்துரையாடல் பல மேற்கொள்ளப்பட்டு பொது திறைசேரிக்கு எழுத்து மூலம் BCC கம்பனிக்கு இத்தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 32 ''திசிந்தி'' தெங்கு உற்பத்தி ஆலைகளிலிருந்தும் தேங்காய் பால் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,376,631 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக குறித்த திசிந்தி ஆலை உரிமையாளர்கள் அறிவூட்டப்பட்டு ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள ஆலைகளிலிருந்து அறவிட வேண்டிய பணத்தை எதிர்வரும் காலங்களில் ஆலை அபிவிருத்தி நிதியத்தின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தேங்காய் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை தற்போது அறவிடப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கும் இதன் பின்னர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜய இசுரு கடன் வழங்குவதற்காக 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆலை அபிவிருத்தி நிதியத்திற்காக தேங்காய் எண்ணைய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து ரூபா 76,277,972 தொகையும் அரசிடமிருந்து ரூபா 123,000,0000 தொகையுமாக பெற்றுக்கொள்ளப்பட்டு மொத்தம் ரூபா 199,277,972 ஆன கடன் தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | பெற்றுக்கொண்ட கடன் தொகையை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இளநீர் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு செலுத்த வேண்டிய இளநீர் ஏற்றுமதி சேவைகள் கட்டண வருமானத் திலிருந்து 40 சதவீதமான ரூபா 21,802,011 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்தும் மற்றுமொரு நிறுவனத்திற்குசெலுத்த வேண்டிய ரூபா 463,942 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இளநீர் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு வழங்குவதற்குப் பதிலாக தென்னை மற்றும் இளநீர் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதால் இது தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. (மற்றைய நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 463,942 தொகை தொடர்பாக கருத்து தெரிவிக்கவில்லை) | செலுத்த வேண்டிய தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,194,029 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 63,223,491 ஆகும். அதன் பிராகரம் நிதி விளைவுகளில் ரூபா 45,029,462 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் திறைசேரி நிதிஏற்பாடு ரூபா 31,072,688 ஆல் அதிகரித்து செலவினம் ரூபா 65,285,714 ஆல் வீழ்ச்சியடைந்து இருந்த போதும் நிறுவனம் உழைத்த வருமானம் ரூபா 63,322,688 ஆல் குறைவடைந்தமை மற்றும் எண்ணைய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து ரூபா 93,228,592 தொகை திரட்டு நிதியத்திற்கு மாற்றியமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தும்பு கைத்தொழில் அபிவிருத்திக்காக உரிய தரப்பினரை பயிற்சியளிக்கும் நோக்கில் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த துன்கண்ணாவ தும்பு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் இயந்திர உபகரணங்கள் திருத்தம் செய்யப்படாமை காரணமாக 2020 பெப்ரவரி மாதம் முதல் நிறுத்தப்பட்ட காரணத்தினால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,586,383 செலவு செய்து மேற்கொண்ட புனரமைப்பு உட்பட கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றம் தளபாட உபகரணங்கள் விளைவற்று அழிவடையும் ஆபத்திற்குட்பட்டிருந்தது. | தற்போது செயற்படுத்த முடியாத மட்டத்தில் காணப்படும் இயந்திரங்களை மீண்டும் செயற்படுத்துவதற்காக அதிகளவில் பணம் செலவிட வேண்டியிருக்கும். அரச மற்றும் தனியார் துறைக்கு இந்த நிறுவனத்தை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்த போதும் அதறகாக பொருத்தமான நிறுவனமொன்று முன்வரவில்லை. 2021 யூலை மாதம் நியமிக்கப்பட்ட முகாமைத்துவம் மீண்டும் இந்த நிறுவனத்தை தும்பு மற்றும் அண்மித்த உற்பத்தி பயிற்சியளிக்கும் நிலையமொன்றாக மாற்றுவதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதால் தற்போது அது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | நிலையத்தை நிர்மாணிக்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் கலற்றி அகற்றிய நீரின் வன்உலோகத்தை பரீட்சிப்பதற்காக பயன்படுத்தப் படும் ரூபா 4,984,973 பெறுமதியான Atonomic Absorption Spectrophotometer (AAS) உபகரணத்தை 2021 யூலை மாதம் இறுதி வரையிலும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் குறித்த சேவைகளை வழங்குவதற்கும் வருமானத்தை உழைப்பதற்கும் முடியாதிருந்தது. இந்த உபகரணம் பழுதடைந்துள்ளதென வருடாந்த இருப்பு பரிசோதனை அறிக்கையில் எவ்வித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டின் போது அதிக செலவிளம் காரணமாக முகவரின் ஆலோசணையின் பேரில் தற்காலிகமாக கழற்றி அகற்றப்பட்டது. அதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு வரை ஆய்வுகூட நவீன மயப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட போதும் உபகரணம் செயற்படும் போது குறைபாடுகளுடன் இருந்தமையால் இறக்குமதி செய்த பகுதி பொருத்தப்பட்டு 2021 ஆகஸ்ட் மாதம் முதல் உபகரணத்தைப் பயன்படுத்தி வன்உலோக பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. | தாமதமின்றி இயந்திரம் பயன்படுத்த வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெயின் தரத்தை பராமரித்து செல்லும் அதிகாரசபையின் கடமையை நிறைவேற்றுவதற்காக தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் தரமான தேங்கா எண்ணைய்யை பாவனையாளர்களுக்கு வழங்குதல் போன்ற தந்திரோபாய முறைகள் தெரிவுசெய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த போதும் தரமான எண்ணைய் உற்பத்திகளுக்கான 5 நட்சத்திரத்திலான இலட்சினை 2019 ஆம் ஆண்டின் போது 07 எண்ணைய் ஆலை உரிமையாளர்கள் மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்தனர். | உற்பத்திச் செயற்பாடு உட்பட தரமான நிபந்தனைகள் 5 இனை பூர்த்தி செய்த உள்நாட்டு உற்பத்தியாளை தரப்படுத்தலாக கருதப்படும் 5 நட்சத்திர இலட்சினை தரப்படுத்தும் செயற்பாட்டின் ஆக உயர்ந்த நிபந்தனையாக கருதப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டின் போது விண்ணப்பத்திருந்த 14 கைத்தொழில்களில் தர நியதிகளைப் பூர்த்தி செய்திருந்த 7 கைத்தொழில்களுக்கு மாத்திரம் இலட்சினை வழங்குவதற்கு முடியுமாக இருந்தது. உற்பத்தி செயற்பட்டிலிருந்து மொத்த கைத்தொழில் துறையும் இதுவரை ஏதேனும் சில முன்னேற்றங்களை பெற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிடலாம். | தேங்காய் உற்பத்திகளின் தரத்தை பராமரித்துச் செல்லும் அதிகார சபையிடமுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016-2019 இற்கு இடையிலான காலத்தில் சராசரி வருடாந்த எண்ணைய் உற்பத்தியான 29,287 மெ.தொன்னில் 5,516 மெ.தொ. ஏற்றுமதி செய்ததன் பின்னர் உள்நாட்டு பயன்பாட்டிற்காக மதமாகும் சராசரி தேங்காய் எண்ணையின் அளவு 23,771 மெ.தொ மாத்திரமாக இருந்த போதும் உள்நாட்டு தேவைப்பாடு 93,103 மெ.தொ ஆக இருந்தமையால் பற்றாக்குறையான 69,332 மெ.தொ. இல் 5,044 மெ.தொ. இக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணையாலும் எஞ்சிய 69 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் பாம் எண்ணைய் மூலமும் வழங்கப்படுவதுடன் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியில் சராசரி பாம் எண்ணைய் இறக்குமதி 199,433 மெ.தொ. ஆகும். அதன் | தென்னை அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு 90,000 மெட்ரிக் தொன்களுக்கு மேற்பட்ட அளவொன்று உற்பத்தி இயலளவொன்றுடன் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களைக் கொண்டுள்ள போதும் ஒட்டுமொத்த தொழில்துறைக்கும் உள்நாட்டு நுகர்வுக்கு போதுமான தேங்காய் விளைச்சல் நாட்டில் இல்லாததால் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் மற்றும் உள்ளூர் எண்ணெய்களைப் பயன்படுத்த பொதுமக்கள் முன் வருகிறார்கள். எனவே இறக்குமதி செய்யப்பட்ட 190,000 மெற்றிக் தொன் பாம் எண்ணைய் பொதுமக்களால் | உள்நாட்டு தேங்காய் எண்ணைய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக குறுங்கால மற்றும் நீண்டகால தேவையான மாற்று பயன்பாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் தரமான தேங்காய் எண்ணைய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் உள்நாட்டு தேங்காய் எண்ணைய் பயன்பாட்டின் தேவைக்கு கூடுதலான பகுதியொன்றை பாம் எண்ணைய் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணையால் நிறைவேற்றிக் கொள்ளல் அதிகாரசபையின் நோக்கங் களுக்கு இனங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மாற்று எண்ணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 1975 இன் 24 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1979 திசெம்பர் 31 ஆம் திகதிய 69/4 ஆம் இலக்க விசேட வர்த்தமானி வெளியிடப்பட்ட முதலாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட 3 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தென்னை உற்பத்திகளின் தரத்தை நியமப்படுத்தல் மற்றும் பேணிச்செல்ல அதிகாரசபை மேற்கொள்ள வேண்டிய போதிலும் தேங்காய் எண்ணைய் பயன்படுத்துவோரின் 72 சதவீதத்திற்காக தரப் பரிசோதனையொன்று இடம் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இதுவரை ஆய்வுகூடத்தின் மூலம் கைத்தொழிலாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்ட எண்ணைய் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு உரித்தான ஆலைகளை அண்மித்து உற்பத்தி செய்த எண்ணைய் மாத்திரமாகும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எண்ணைய் உற்பத்திகளின் தரத்தை தீர்மானித்தல் மற்றும் பேணிச் செல்வது தொடர்பாக காணப்படும் நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும். |
| (ஈ) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் “திசிந்தி” தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்தியின் பொருட்டு 1980 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்ட ஆலை அபிவிருத்தி நிதியத்தின் நோக்கம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு திசிந்தி எண்ணைய் 1 கி.கி. இற்காக 20 சதப் படி செஸ் நிதியத்திலிருந்து கிடைக்கும் | திசிந்தி தெங்கு உற்பத்தி நிறுவனம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அடுத்த ஆண்டிற்கு பதிவுசெய்வதற்கு முன்னர் நிறுவனத்தில் காணப்படும் குறைபாடுகளை பட்டியலிட்டு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தாக்கமளிக்கும் குறைபாடுகளை பதிவு செய்வதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென அறிவிக்கின்றது.<br>2017 மற்றும் 2018 ஆம் | முறையான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றினுடாக நிதியத்தை தாபித்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கவனம் செலுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பணம் அந்த ஆலை உரிமையாளர்களின் பெயரில் சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு ஆலைகளின் நவீனமயப்படுத்தல் மற்றும் ஆலைகளை நடாத்திச் செல்லும் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். எனினும் 2019-2020 ஆம் ஆண்டுகளின் போது அது தொடர்பாக எவ்வித செயற்பாடொன்று பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது கிடைத்த செஸ் நிதியம் ரூபா 5,916,064 தொகை உட்பட மீளாய்வாண்டில் இறுதியில் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 84,206,686 தொகையும் வங்கி கணக்குகளின் பெறுமதி ரூபா 160,,835,956 ஆக இருந்தது.<br>மேலும் கைத்தொழிலின் சிக்கல்களை இனங்காணும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை செயற் திறனாக மேற்கொண்டு குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வருடாந்த பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் என்பவற்றை தயாரிப்பதற்கும் நிதியத்தை சட்டரீதியான நிலைமைக்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளின் போது தெங்கு கைத்தொழில் ஏற்பட்ட எதிர்பாராத மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக திசிந்தி தெங்கு கைத்தொழிலின் தொழிற்படு மூலதன தேவைப்பாடு இந்நிதியத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட போதும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக நிதி மீளளிப்பு ஒன்று இடம்பெறவில்லை.<br>வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு பொது திறைசேரியால் வழங்கப்படும் நிதிஏற்பாடுகளே உள்ளடக்கப்படுகின்றன. | |
| (உ) | 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் தேங்காய் எண்ணைய்யை கூடுதலாக கொள்வனவு செய்து விலை அதிகரிப்பு குறைவு என்பவற்றின் பிரகாரம் சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் தேங்காய் எண்ணைய் விலை நிர்ணயிக்கும் நிதியம் தாபிக்கப்பட்டிருந்த போதும் 1981 ஆம் ஆண்டிலிருந்து இந்த வேலைத்திட்டம் அதிகார சபையால் கைவிடப்பட்டு அதற்காக துறைமுகத்தில் | எண்ணைய் தாங்கி தொடர்பாக எவ்வித நிதிசார் பெறுமதியொன்று தற்போது அறிந்துகொள்ள முடியாதுள்ளது. இந்நிதியத்தின் மூலம் உழைக்கக்கூடிய பணத்தை முறைப்படி முதலீடு செய்யப்பட்டுள்ளது. | 29 ஆண்டுகளாக செயற்படாமல் காணப்படும் இந்நிதியம் தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். 1981 ஆம் ஆண்டு முதல் இந்த வேலைத்திட்டம் கை விடப்பட்டமைக்கான காரணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பேணப்பட்டிருந்த எண்ணைய் தாங்கிகளும் வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 1985 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ள ரூபா 78,865,954 ஆன கடன்தொகையொன்று உட்பட மொத்தம் 157,943,367 ஆன அறவிட வேண்டிய கடன் மீதியொன்றும் ரூபா 220,171,884 ஆன முதலீட்டு மீதியொன்றும் ரூபா 324,046,799 ஆன திரட்டிய நிதி மீதியொன்றுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | | தெளிவுபடுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | தேங்காய் சிரட்டை கரி தயாரித்தல் மற்றும் அதற்கான பெறுமதியை கூட்டி உப உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு வசதிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் 15 கைத்தொழிலாளர்களுக்கு ரூபா 02 மில்லியன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 05 கைத்தொழிலாளர்களுக்காக ரூபா 0.61 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் அது 31 சதவீதமாக இருந்தது. | இதன் கீழ் முறைசாரா பிரிவின் கைத்தொழில் மேம்படுத்தலுக்ககாக வசதிகளை அபிவிருத்தி செய்த போதும் தொற்று நோய் நிலைமை காரணமாக இச் செயற்திட்டத்திலிருந்து எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியாதிருந்தது, 2020 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட மேலும் 04 முதலீட்டாளர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த இலக்குகள் அடைந்து கொள்ளப்பட வேண்டும். |